வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-=சரவண குமார்

தேதி 13.2.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, வாஷிங்டன்-டி.சி-யில், அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பை சந்திக்கிறார்.

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**வக்ஃபு திருத்த மசோதா** பற்றிய, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை, எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையே, இன்று நாடாளுமன்ற இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டது.

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், நாளை மாலை தொடக்கி வைக்கிறார்.

மோடி-அமெரிக்கா

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் அமெரிக்க பயணமாக இன்று அதிகாலை வாஷிங்டன்-டி.சி சென்றடைந்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கான இந்திய தூதர் திரு வினய் மோகன் குவாத்ரா, மற்றும், அங்குள்ள இந்திய சமூகத்தினர், கடும் குளிரையும் பொருட்படுத்தாமல், Blair House கட்டிடம் முன்பாக கூடி, பிரதமரை வரவேற்றனர். அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பின் இயக்குநர் திருமதி துல்சி கபார்டு இன்று வாஷிங்டன்-டி.சியில், பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். தீவிரவாத எதிர்ப்பு, சைபர் பாதுகாப்பு, புலனாய்வு தகவல்களின் பரிமாற்றம் உள்ளிட்ட துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்பை சந்திக்கிறார். இந்த சந்திப்பின் போது,

கட்டுப்படுத்திய நிலையிலும், பிரதிநிதிகள் நிலையிலும் இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளன. அமெரிக்க அதிபரை சந்தித்து, இருநாடுகளுக்கும் இடையே, விரிவான, உலகளாவிய கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து பேசத் தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி உள்ளார். திரு டொனால்டு டிரம்ப் 2-ஆம் முறை அமெரிக்க அதிபராக பதவி ஏற்ற சில வாரங்களுக்கு உள்ளாகவே, அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் பிரதமர் திரு நரேந்திர மோடி அமெரிக்கா சென்றுள்ளதும், புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் முதலாவதாக அமெரிக்கா செல்லும் உலகத் தலைவர்கள் சிலரில் ஒருவராக அவர் திகழ்வதும் குறிப்பிடத் தக்கது. அமெரிக்காவில், முக்கிய நிர்வாகத் தலைவர்கள், வர்த்தக தலைவர்கள் மற்றும் இந்திய சமூகத்தினரையும், பிரதமர் திரு நரேந்திர மோடி சந்திக்க இருக்கிறார்.

*மோடி-வானொலி*

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். தகவல்களை வழங்கி, உணர்வூக்கம் அளித்து, மக்களை ஒருங்கிணைக்கும் கருவியான வானொலி, பலருக்கும் உயிர் நாடியாகவே திகழ்வதாக, சமூக ஊடகப் பதிவில் அவர் கூறி உள்ளார். செய்திகள் முதல், இசை, இலக்கியம் மற்றும் கலாச்சாரம் வரை அனைத்திற்கும் முக்கிய இடம் அளித்து,படைப்பாற்றலைக் கொண்டாடும் சக்தி வாய்ந்த ஊடகம் வானொலி என்றும், வானொலி உலகுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் தாம் பாராட்டுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். வானொலியில் வரும் 23-ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ள மன் கி பாத் நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பொது மக்கள் தம்முடன் பகிர்ந்து கொள்ளலாம் என்றும் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். உலக வானொலி தினம் குறித்து, ஒரு செய்தி தொகுப்பு…

**(வாய்ஸ்)**

*வானொலி தினம்*

**(வாய்ஸ்)**

பணியின் போதும், பயணத்தின் போதும், பெருமழை-புயல் போன்ற பேரிடர் காலங்களின் போதும் தோழனாய் துணை நிற்கும் வானொலிக்கான தினம் இன்று………. ஐ நா சபையின் வானொலி அலைவரிசை தொடக்கப்பட்ட பிப்ரவரி 13-ஆம் தேதி உலக வானொலி தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

கைப்பேசி, இணையம் போன்ற எல்லா தளங்களிலும் தன்னை இணைத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல், தன்னுடைய நம்பகத் தன்மையையும் இழக்காமல் இருப்பதுதான், வானொலி இன்றும் தனக்கான இடத்தை தக்க வைத்துக் கொண்டிருப்பதற்கான காரணம் என்றால், அது மிகையாகாது. நம் நாட்டில் 98 சதவிகிதம் மக்களை வானொலி சென்றடைகிறது என்பதையும், பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ள, வானொலியைத் தான் தேர்ந்தெடுத்து இருக்கிறார் என்பதையும் இங்கே, மகிழ்வோடு பதிவு செய்து கொள்கிறோம். இவ்வாண்டு, **வானிலையும்-காலநிலை மாற்றமும்** என்ற கருப்பொருளில் வானொலி தினம் கொண்டாடப்படுகிறது. கடற்கரை பிரதேசமான நமது புதுச்சேரி, தானே, நீலம், ஃபெஞ்சல் எனப் பல புயல்களால் ஸ்தம்பித்த காலத்திலும், வானிலை எச்சரிக்கை, மற்றும் அரசின் முன்னேற்பாடுகள் பற்றிய தகவல்களையும் அவசரகால உதவி எண்களையும் பொது மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் புதுச்சேரி வானொலியின் பங்கு குறிப்பிடத் தக்கது.

*வானொலி-ஜாஜு*

உலக வானொலி தினமான இன்று புதுடெல்லியில் நடப்பாண்டிற்கான வானொலி திருவிழாவை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு சஞ்சய் ஜாஜு தொடக்கி வைத்தார். உலகின் மிகப் பெரிய ஒலிபரப்பு அமைப்புகளில் ஒன்றாக ஆகாஷ்வாணி திகழ்வதாக, தொடக்க விழாவில் பேசுகையில் அவர் கூறினார். நாட்டில் மொத்தம் உள்ள சமுதாய வானொலி நிலையங்களின் எண்ணிக்கையும், கடந்த 10 ஆண்டுகளில், 114-ல் இருந்து, 530-ஆக அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். ஆகாஷ்வாணி தலைமை இயக்குநர் டாக்டர் பிராக்யா பலிவால் கவுர் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

*மீன் வளம்*

பிரதமரின் **மத்ஸ்ய கிசான் சம்ரிதி சகயோஜனா** திட்டத்தின் கீழ் மீனவர்கள் பயன் பெற ஏதுவாக தேசிய மீன்வள டிஜிட்டல் வசதியில் மீனவர்களை பெயர் பதிவு செய்வதற்கான, நாடு தழுவிய சிறப்பு இயக்கம் ஒன்றை மத்திய அரசு நாளை முதல் செயல்படுத்த உள்ளது. வரும் 22-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த இயக்கத்தின் போது, முக்கிய மீனவர் பகுதிகள், மற்றும் வாய்ப்புள்ள இதர பகுதிகளில் பெயர் பதிவு முகாம்களை நடத்த முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மீனவர்களுக்கான பிரதமரின் ஆதரவு திட்டத்தில் மீன்வளத் துறையை முறை சார்ந்த துறையாக மேம்படுத்தவும், மீனவர்கள் மற்றும்

மீன்வளர்ப்பு பண்ணைகளுக்கு அமைப்பு ரீதியிலான கடன், காப்பீடு மற்றும் சந்தை வசதிகளை வழங்கவும் முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது.

*நாடாளுமன்றம்*

**வக்ஃபு திருத்த மசோதா** பற்றிய, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை, எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையே, இன்று நாடாளுமன்ற இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டது. மக்களவையில், ஒத்தி வைப்பிற்கு பின்னர், பிற்பகல் 2 மணிக்கு அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் திரு ஜகதம்பிகா பால் அறிக்கையை அவையில் தாக்கல் செய்தார். எதிர்கட்சிகளின் கோரிக்கைப் படி, அதிருப்திக் கருத்துக்களை அறிக்கையில் சேர்க்க, சபாநாயகர் அனுமதி அளித்தால், பாரதிய ஜனதாவிற்கு ஆட்சேபணை இல்லை என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அமளிக்கு இடையிலேயே அவையில் கூறினார். ஆயினும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள், அறிக்கையைக் கண்டித்து அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். முன்னதாக இன்று காலை அவையின் அலுவல்கள் தொடங்கிய போது கூட்டு நாடாளுமன்ற குழுவின் அறிக்கை குறித்து எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால் அலுவல்கள் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

*நாடாளுமன்றம்*

மாநிலங்களைவையில் இன்று காலை அலுவல்கள் தொடங்கிய போது பிஜேபி உறுப்பினர் டாக்டர் எம்வி குல்கர்னி, கூட்டு நாடாளுமன்றக் குழு அறிக்கையின் நகலை அவையில் தாக்கல் செய்தார். மாநிலங்களவையிலும் எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அலுவல்கள் சிறிது நேரம் ஒத்தி வைக்கப்பட்டன. பின்னர் முற்பகல் 11.20-க்கு அவை மீண்டும் கூடிய போது, அறிக்கையின் எந்த ஒரு பகுதியோ அல்லது அதிருப்தி கருத்துக்களோ நீக்கப்படவில்லை என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு அவையில் தெளிவு படுத்தினார். கூட்டு நாடாளுமன்றக் குழுவின் எல்லா நடைமுறைகளும், முற்றிலும் விதி முறைகளின் படியே மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார். ஆயினும் எதிர்கட்சி உறுப்பினர்கள், அரசின் பதிலில் திருப்தி அடையாமல், அவையில்இருந்து வெளிநடப்பு செய்தனர்.

*காசி-தமிழ்*

**ஒரே பாரதம்-உன்னத பாரதம்** இயக்கத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, மூன்றாம் கட்ட காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்பவர்களுக்கான முதலாவது ரயிலை, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, இன்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து கொடி அசைத்து வழி அனுப்பி வைத்தார். இந்த ரயிலில் ஏராளமான

மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், மற்றும், கலை-கலாச்சார வல்லுனர்கள் பயணிக்கிறார்கள்.

*பிரஞ்ச் விழா*

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், நாளை மாலை தொடக்கி வைக்கிறார். கடற்கரை சாலை காந்தி திடலில் நடைபெறும் தொடக்க விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், புதுச்சேரிக்கான பிரஞ்ச் தூதரக ஜென்ரல் திரு எத்தியன் ரோலண்ட்-பிகுய் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். நாளை முதல் வரும் 16-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தோ-பிரஞ்ச் திருவிழாவில், இருநாட்டு கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், பிரம்மாண்டமான பொம்மலாட்ட பொம்மைகளின் வீதி உலா உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் இடம் பெற உள்ளன.

*புதுச்சேரி-பேரணி*

காரைக்காலில் வட்டார வளர்ச்சித் துறையும், ஊரக வாழ்வாதார இயக்கமும் இணைந்து இன்று நடத்திய, பாலியல் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர் அப்பாராவ் தொடக்கி வைத்தார். எல்லா செயல்களிலும், ஆண்-பெண் பாகுபாடு இன்றி, அனைவரையும் சமமாக நினைக்க வேண்டும் என்றும் தற்போது பாலினப் பாகுபாடுகள் மறைந்து வரும் நிலையை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லுதல் அவசியம் என்றும் அவர் கூறினார். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த என்எஸ்எஸ் மாணவர்கள், மற்றும், மகளிர் சுயஉதவிக் குழுவினர், விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திய வண்ணம் இப்பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியை தொடக்க வைத்த பின்னர் ஊரக வாழ்வாதார திட்டப் பயனாளிகளுக்கு, விதைகளையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

*கும்பமேளா*

பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவின் போது, பொய்த் தகவல் மற்றும் வதந்திகளில் இருந்து மக்களை பாதுகாக்க, உத்தரபிரதேஷ் போலீசார், கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சமூக ஊடகத்தில் பொய்த் தகவல் பரப்பும் கணக்குகளை இனம் கண்டு முடக்க, நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், குறிப்பாக கும்பமேளா பகுதியில், நதிக் கரையில் சடலங்கள் கிடப்பது போல சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ள வீடியோ படம், பல ஆண்டுகளுக்கு முன்னர் காசியாபாத்தில் எடுக்கப்பட்டது என்பதை தாங்கள் உறுதிப்படுத்தி இருப்பதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர். தவறான படத்தை வெளியிட்டவர்கள் மீது வழக்கு பதிவு

செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மகா கும்பமேளாவிற்கு வரும் வதந்திகளை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் காவல் துறை தெரிவித்துள்ளன.

ஓய்வூதியம்

தேசிய அளவிலான பல்வேறு ஓய்வூதிய திட்டங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இன்று மாநிலங்களவையில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், மத்திய அரசின் ஓய்வூதிய திட்டங்களால், தற்போது 6 கோடி பேர் பயன் பெறுவதாக கூறினார்.

மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கேள்வி நேரத்தில் பேசுகையில் நில அதிர்வு சவால்களை திறம்பட்ட முறையில் எதிர்கொள்ள, பல்முறை உத்திகளை அரசு பயன்படுத்துவதாகவும், இமயமலையில், கண்காணிப்பு கருவிகள் உட்பட ஏராளமான முன்னெச்சரிக்கை வசதிகள் நிறுவப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

முர்மு-டிஜிட்டல்

அரசின் எல்லாத் துறைகளும் புதிய தொழில் நுட்பங்களின் அடிப்படையில் டிஜிட்டல் மயமாதல் அவசியம் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இந்திய **சிவில் கணக்கியல் சேவை** மற்றும் இந்திய **தொலை தொடர்பு சேவை**க்கு தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது பயிற்சியில் உள்ள இளம் அதிகாரிகளின் குழு ஒன்று, இன்று புதுடெல்லி ராஷ்டிரபதி பவனில் குடியரசு தலைவரை சந்தித்த போது அவர் இவ்வாறு கூறினார். அரசுத் துறைகளின் பணிகளை, மக்களை மையமாகக் கொண்ட, வெளிப்படையான, திறம்பட்ட சேவையாகவும் மேம்படுத்த ஏதுவாக அரசு அதிகாரிகள் புதிய தொழில் நுட்பங்களை உடனுக்குடன் கற்றுக் கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, வாஷிங்டன்-டி.சி-யில், அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பை சந்திக்கிறார்.

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**வக்ஃபு திருத்த மசோதா** பற்றிய, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை, எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையே, இன்று நாடாளுமன்ற இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டது.

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், நாளை மாலை தொடக்கி வைக்கிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/13.2.2025/Script/

---------------------------